# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(குற்றவியல் நடைமுறை விதி பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM I

807-1704

C

1. District / மாவட்டம்: விருதுநகர் PS / காவல்நிலையம்: ஊ.த.க பிரிவு விருதுநகர் Year / ஆண்டு: 2022 FIR No / முதல் தகவல் அறிக்கை எண்: 01/22 Date / நாள்: 28-12-2022

2. (i) Act / சட்டம் Sections / பிரிவுகள்: 7 of PC Act
   (ii) Act / சட்டம் Sections / பிரிவுகள்: 1988 as Amended
   (iii) Act / சட்டம் Sections / பிரிவுகள்: in 2018
   (iv) Other Acts & Sections / பிற சட்டங்களும், பிரிவுகளும்:

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள் Date from / நாள் முதல் Date to / நாள் வரை: 28-12-2022
   Time Period / நேர அளவு Time from / நேரம் முதல் Time to / நேரம் வரை: 10.30 hrs
   (b) Information Received at PS Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 28-12-2022 Time / நேரம்: 15.00 hrs
   (c) General Diary Reference Entry No(s) / பொது நாட்குறிப்பின் பதிவு விவரம் எண் Time / நேரம்:

4. Type of Information Written/ Oral / தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number / முறைக் காவல் எண் (b) Address / முகவரி: தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர் அலுவலகம், இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம். சுமார் 57 கி.மீ தென்கிழக்கு
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S: District: / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: Dr. P.V. ஜவஹர்லால் (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர்: திரு. P.A. வெங்கட்ராமன்
   (c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு: (d) Nationality / நாட்டினம்: இந்தியன் (e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்: —
   Date of Issue / வழங்கப்பட்ட நாள்: Place of Issue / வழங்கப்பட்ட இடம்:
   (f) Occupation / தொழில்: மருத்துவர் (g) Address / முகவரி: ஜவஹர் பிரமா கேர் சென்டர், கதவு எண். 130, காமராஜ் நகர், இராஜபாளையம் - 626117, விருதுநகர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) / தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. முருகன், உதவி ஆய்வாளர், தொழிலாளர் துறை, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant / குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதம் இல்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) —
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 28.12.2022 மாலை 15.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, இராஜபாளையம், காமராஜ் நகர், கதவு எண்.130, என்ற முகவரியைச் சேர்ந்த திரு.P.A.வெங்கட்ராமன் என்பவரின் மகன் டாக்டர்.P.V.ஜவஹர்லால் என்பவர் என் முன்பாக ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, மேற்படி மனுமீது இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகளும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 28.12.2022 மாலை 17.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.முருகன், தொழிலாளர்துறை உதவி ஆய்வாளர், தொழிலாளர்துறை உதவி ஆய்வாளர் அலுவலகம், இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2022 பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம் - 2018)-இன்படி வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகார் மனு விபரம்

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ............................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 28.12.2022 | 28/12/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.12.2022 at 17.15 hrs.

Name பெயர் C. SALVAN THURAI
Rank நிலை Inspector of Police VAC Virudhunagar.

GCP-240-34(Type 2) 90,000 Cps -21 3 18(HCL-12)p 2

**விருதுநகர் ஊ.த.க.பிரிவு குற்ற எண்.07/2022 பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

பின்வருமாறு அனுப்புநர் டாக்டர் P V ஜவஹர்லால், 62/2022, த/பெ.திரு. P A வெங்கடராமன், ஜவஹர் டிராமா கேர் சென்டர், எண்.130, காமராஜர் நகர், இராஜபாளையம்-626 117. விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, நான் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் ஜவஹர் டிராமா கேர் சென்டர் என்ற பெயரில் கிளினிக் நடத்தி வருகிறேன். எங்களது மருத்துவமனையில் 11 செவிலியர்கள் பணியாற்றி வருகிறார்கள். கடந்த 25.11.2022ஆம் தேதி காலை சுமார் 11.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை நான் வெளியூர் சென்றிருந்தபோது, விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் தொழிலாளர்துறை உதவி ஆய்வாளராக பணியாற்றும் திரு.முருகன் என்பவர் என்னுடைய மருத்துவமனையை ஆய்வு செய்து, ஆவணங்களை பரிசீலனை செய்து, பணியாளர்களுக்கு குறைவாக ஊதியம் வழங்குவதாக கூறி அறிக்கை தயார் செய்து, அதில் எனது மகன் டாக்டர்.P.J.ஆகாஷ் கார்த்திக்கிடமும், மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர் திரு.P.சந்தானம் என்பவரிடமும் கையொப்பம் பெற்றுக் கொண்டு, மருத்துவமனைக்கு நோட்டீஸ் வரும் என்று கூறிவிட்டு சென்றுள்ளார். மீண்டும் 15.12.2022 அன்று இராஜபாளையம் தொழிலாளர்துறை அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் பெருமாள் என்பவர் தொலைபேசியில் மேற்படி திரு.சந்தானத்திடம், எங்க உதவி ஆய்வாளர வந்து உங்க டாக்டர் பார்க்கமாட்டாரா, அவரு நோட்டீஸ் அனுப்புனா டாக்டர்தான் அலைய வேண்டி வரும் என்று கூறியுள்ளார். உடனே திரு.சந்தானம் இராஜபாளையம் தொழிலாளர் அலுவலகம் சென்று உதவி ஆய்வாளர் திரு.முருகனை சந்தித்தபோது, என்ன உங்க டாக்டர் வரமாட்டாரா, அவர வந்து பார்க்க சொல்லுங்க என்று கூறி அனுப்பிவிட்டதாக என்னிடம் தெரிவித்தார். பின்னர் நான் வெளியூர் சென்றுவிட்டு வந்து இன்று (28.12.2022) காலை சுமார் 10.30 மணிக்கு தொழிலாளர்துறை உதவி ஆய்வாளர் திரு.முருகன் என்பவரை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம், நீங்க உங்க மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு குறைவான சம்பளம் வழங்குறீங்க, இது தப்புன்னு தெரியாதா, இது சம்மந்தமான அறிக்கை மதுரை JC அலுவலகத்திற்கு அனுப்பினால் உங்களுக்குத்தானே பிரச்சினை என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், சார், நான் எங்க மருத்துவமனையில பணிபுரியும் பணியாளர்களுக்கு சரியான முறையில்தான் சம்பளம் கொடுக்கிறேன், நீங்க இப்படி ஆய்வு செய்து நோட்டீஸ் அனுப்பினால் என்ன செய்வது, நான் நோயாளிகளுக்கு மருத்துவம் செய்ய வேண்டும் என்ற சிந்தனையில் இருந்து வருகிறேன், நீங்க இப்படி கேஸ் போட்டால் என்னால் தொடர்ந்து நோயாளிகளுக்கு மருத்துவம் முறையாக

செய்யவும் முடியாது, என்னால அலையவும் முடியாது என்றும் தெரிவித்தேன். அதற்கு அவர் என்னிடம், சரி நடந்தத விடுங்க, மறுபடியும் உங்கள் மருத்துவமனையை நான் ஆய்வு செய்யாமல் இருக்கவும், அங்கு பணிபுரிபவர்களுக்கு குறைவான சம்பளம் வழங்குவது சம்மந்தமாக அறிக்கையை அனுப்பாமல் இருக்கவும் எனக்கு ரூ.10,000/- பணம் கொடுத்துருங்க என்று கேட்டார். மேலும் தொழிலாளர்துறை உதவி ஆய்வாளர் திரு.முருகன் என்னிடம், சார் நான் எல்லாத்துக்கும் நோட்டீஸ் அனுப்புறதுதான், உங்களுக்கு மட்டும் தனியா ஒன்னும் அனுப்பல, நான் கேட்டபடி நீங்க ரூ.10,000/- கொடுத்தால், இனிமேல் உங்க மருத்துவமனைக்கு எந்த தொந்தரவும் இல்லாமல் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னார். அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை, இருந்தாலும் சார் ரூ.10,000/- ரொம்ப அதிகமாக இருக்கு என்று சொன்னேன். அதற்கு தொழிலாளர்துறை உதவி ஆய்வாளர் திரு.முருகன் எல்லோரிடமும் நான் பத்தாயிரமோ, இருபதாயிரமோ அல்லது அதற்கும் மேலேயேதான் வாங்கி வருகிறேன், உங்களுக்கு ரூ.10,000/- என்பது மிகக் குறைவுதான், அதனால நான் கேட்ட ரூ.10,000/-த்தை கொண்டு வந்து, அசிஸ்டணட் பெருமாள்கிட்ட கொடுத்திடுங்க, இனிமே உங்க மருத்துவமனையை நான் ஆய்வு செய்யாமல் பார்த்து கொள்கிறேன், இல்லாட்டி உங்க மருத்துவமனை மேல அடிக்கடி நோட்டீஸ் அனுப்ப வேண்டி வரும் என்று சொன்னார். லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. என்னிடம் லஞ்சமாக ரூ.10,000/- பணம் கேட்ட இராஜபாளையம் தொழிலாளர்துறை உதவி ஆய்வாளர் திரு.முருகன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd) P.V.ஜவஹர்லால் 28.12.2022 Sir, Received the complaint on 28.12.2022 at 15.00 hrs. The genuiness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found Prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case in warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.07/2022 u/s 7 of PC Act 1988 as Amended in 2018 on 28.12.2022 at 17.00 hrs and took up for Investigation. (Sd) C.Salvan Thurai 28.12.2022, Inspector of Police, V&AC, VNR.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble CJM / Spl. Judge for PC Act cases, Srivilliputhur and the copies submitted to the concerned officers.

28/12/22
C. Salvan Thurai
Inspector of Police
V&AC
Virudhunagar.